(EMIS) -கல்வியியல் மேலாண்மை தகவல் மையத்தில் உள்ள இடர்பாடுகள் சார்ந்து பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட கடிதங்கள்.

| வ. எண் | EMIS சார்ந்த இடர்பாடுகள் & ஆலோசனைகள் | விளக்கம் |
|---|---|---|
| 1. | 1) தலைமையாசிரியர்களால் தமது ஆசிரியர்கள் அவரவர் வகுப்புகளுக்கு வருகைப் பதிவினை உள்ளீடு செய்துள்ளனரா என்பதை உறுதி செய்ய முடிவதில்லை.<br><br>2) ஒரு முறை வருகைப் பதிவிட்ட பின்னர் பள்ளி Login ன் முகப்பில் பதிவிட்ட வகுப்புகளது வருகைச் சுருக்கம் இடம் பெற செய்யலாம். இதன் மூலமாக வருகைப் பதிவிடாத பிரிவுகளை அன்றே கண்டறிந்து கொண்டு அனைவருக்கும் வருகை பதிவிட ஏதுவாக இருக்கும்.<br>3) வருகைப்பதிவு அறிக்கை நாளொன்றுக்கு இருமுறை (மதியம், & மாலை) பதிவிறக்கம் செய்யும்வண்ணம் இருந்தால் வட்டார/மாவட்ட அளவில் கண்காணித்தல் சிறப்பாக செய்திடலாம். | (1) & (2) அனைத்து வகுப்பு ஆசிரியர்களும், வருகைப் பதிவு மேற்கொண்டதை தலைமை ஆசிரியர் கண்டு உறுதி செய்வதற்கும் பணிகள் நடந்து வருகின்றன. ஒரு மாத காலத்திற்குள் இதை செயலியில் (Mobile Application) காண இயலும்.<br><br>(3) ஆசிரியர்கள் கல்விப் பணியில் முழு கவனம் செலுத்தும் பொருட்டு, தற்போதைய நிலையில் வருகைப் பதிவு மேற்கொண்டு அன்றைய நாள் முழுவதும் "Save &Sync" செய்யும் வாய்ப்பு உள்ளது. மேலும் மாநிலத்தின் அனைத்து பள்ளிகளிலும் இணைய வசதி முழு அளவில் சென்றடையாத நிலை உள்ளது. எனவே ஒரு நாள் மேற்கொள்ளப்பட்ட வருகைப் பதிவினை, அடுத்த வேலை நாள் மாலை 4 மணிக்கு மாநில, மாவட்ட, கல்வி மாவட்ட மற்றும் வட்டார அளவில் காணும் வசதி உள்ளது. |
| 2. | Emis app- ல் ஒரு மொபைலில் வருகை பதிவேற்றம் செய்யப்பட்ட பிறகு மற்றொரு மொபைலில் அதே User name & password பயன்படுத்தினால் அதில் Already submitted or exist என்று வர வேண்டும். ஆனால் தற்போது மற்றொரு மொபைலில் அதே User name & password ஐ பயன்படுத்தி காணும்போது மீண்டும் வருகை பதிவு செய்வது போன்று உள்ளது. | தற்பொழுது EMIS செயலியில் வருகைப் பதிவு செய்யப்பட்ட விவரம் EMIS Server க்கு வந்துவிட்டால் மீண்டும் எப்படி முயற்சி செய்தாலும் வருகை பதிவு மீண்டும் பதிவிட இயலாது. இண்டர்நெட் இல்லாத காரணத்தினால் EMIS Server க்கு வராமல் Local Phone memory -ல் தகவல் இருந்தால் வேறு மொபைல் வாயிலாக பதிவிட இயலும். |
| 3. | மாணவர்களுடைய வருகைப் பதிவு மாதாமாதம் ஒவ்வொருவருடைய மாத வருகை நாட்கள் வாரியாக download (E,mis web -ல்) செய்யுமாறு அமைய வேண்டும். | EMIS இணையதளத்தில் Registers பகுதியில் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் வருகைப் பதிவை காணும் வசதி ஒரு மாத காலத்திற்குள் ஏற்படுத்தப்படும் |

| | | |
|---|---|---|
| 4. | வருகைப் பதிவு செய்ய அதிக நேரம் ஆகிறது.<br>( குறிப்பு: அதிகமான நாட்களில் வருகை பதிவு செய்யும் போது Unable to connect server என்றே வருகிறது. இதனால் குறிப்பட்ட நேரத்திற்குள் வருகை பதிவேற்றம் செய்ய இயலவில்லை) | கள ஆய்வு செய்த பிறகே இதற்கான காரணத்தை அறிய இயலும். |
| 5. | ஒருமுறை வருகையை பதிவு செய்து பின்னர் Log out செய்துவிட்டு மீண்டும் Login செய்து மீண்டும் வருகை பதிவினை உறுதி செய்யும் போது, ஏற்கனவே வருகைப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற முன்னறிவிப்பு ஏதும் இல்லாததால், வருகை பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்ய இயலாமல் மீண்டும் மீண்டும் வருகைப் பதிவினை மேற்கொள்ளுவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் காரணமாக வருகைப்பதிவு செய்யப்பட்டதை ஆசிரியர்களால் உறுதி செய்ய முடியவில்லை | தற்பொழுது EMIS செயலியில் வருகைப் பதிவு மேற்கொள்ளப்பட்டவுடன் "Save &Sync" கொடுக்கும் பொழுது ஆரஞ்ச் நிறத்திலும், Server உடன் தகவல் Sync ஆன பிறகு பச்சை நிறத்திலும் வண்ணம் மாறுகிறது. மேற்கூறியவாறு அனைத்து வகுப்பு ஆசிரியர்களும், வருகைப் பதிவு மேற்கொண்டதை தலைமை ஆசிரியர் கண்டு உறுதி செய்வதற்கும் பணிகள் நடந்து வருகின்றன. ஒரு மாத காலத்திற்குள் இதை செயலியில் காண இயலும். |
| 6. | பள்ளிக்கு தினமும் மாணவர்கள் வருகையை 10 மணிக்குள் எமிஸ் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத ஆசிரியர்களுக்கு விளக்கம் கேட்கப்படுகிறது. காலை ஒரே சமயத்தில் லட்சக்கணக்கான மாணவர்களின் வருகையை எமிஸில் பதிவேற்றும்போது, சுமை தாங்காமல் சர்வர் வேலை செய்வதில்லை. | ஆசிரியர்கள் கல்விப் பணியில் முழு கவனம் செலுத்தும் பொருட்டு, தற்போதைய நிலையில் வருகைப் பதிவு மேற்கொண்டு அன்றைய நாள் முழுவதும் "Save &Sync" செய்யும் வாய்ப்பு உள்ளது. சர்வர் சார்ந்த இடர்பாடுகளை பொருத்தவரையில் கள ஆய்வு செய்த பிறகே இதற்கான காரணத்தை அறிய இயலும். |
| 7. | 4 மணி நேரத்தில் நடக்க வேண்டிய ஆசிரியர்கள் கலந்தாய்வு நான்கு நாட்கள் நடக்கிறது. இரவு 12 மணி வரை நடக்கிறது. எமிஸில் ஒரு இடத்தை தேர்வு செய்ய இரவு 12 மணி வரை காத்திருந்தும், ஓபன் ஆகவில்லை, சர்வர் வேலை செய்யவில்லை என்கின்றனர். | பள்ளிக்கல்வித்துறை நடத்திய இணையவழி கலந்தாய்வில், மொத்தம் 14587 ஆசிரியர்கள் பணியிடமாற்று ஆணையும், 3460 ஆசிரியர்கள் பதவி உயர்வு ஆணையும், 4921 ஆசிரியர்கள் பணிநிரவல் ஆணையும் பெற்று இந்தக் கலந்தாய்வின் மூலம் பயன்பெற்றனர். மொத்தம் 55529 ஆசிரியர்களிடமிருந்து மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. விண்ணப்பித்த 55529 ஆசிரியர்களில் சுமார் 35000ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொண்டனர். இவர்களில் |

| | | |
|---|---|---|
| | | ஒவ்வொருவருக்கும் சுமார் 1 நிமிடம் என எடுத்துக் கொண்டாலும், கலந்தாய்வு முடிய சுமார் 41 நாட்கள் (ஒரு நாளுக்கு 14 மணி நேரம்) ஆகும். |
| 8. | 1) கண் பரிசோதனை செய்யப்பட்ட ஒரு மாணவன், ஒரு பள்ளியிலிருந்து வேறு ஒரு பள்ளிக்கு செல்கையில், முந்தைய பள்ளியின் இலக்கு (Target Total Students) ஒரு எண் குறைகிறது. ஆனால் அடைவானது (Achievement/Screened) கூடுதலாக ஒரு எண் காட்டுகின்றது. இதனால் பதிவிறக்கம் செய்யப்பட்ட அறிக்கையில் பள்ளியில் கண் பரிசோதனை செய்யப்படாத மாணவர்கள் எண்ணிக்கை Minus ல் வருகின்றது.<br>2) உடல் நிறை குறியீட்டெண் (BMI) பதிவிடுகையில் ஒரே உயரம் மற்றும் எடை இரு மாணவர்களுக்கு வருமேயானால் Duplicate Entry" எனும் எச்சரிக்கை வருகிறது.<br>3) ஊட்டச் சத்து & மதிய உணவு (Nutrition & Noon Meal) சார்ந்த பதிவுகளுக்கான அறிக்கை இதுநாள் வரை வட்டார/மாவட்ட Login பதிவிறக்கத்தில் வழுங்கப்படாத காரணத்தால், இப்பதிவு சார்ந்த முன்னேற்றம் அறியப்பட முடியவில்லை. | (1) மற்றும் (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைகள் நிவர்த்திசெய்யப்பட்டுள்ளது.<br><br>(2) ஊட்டச்சத்து மற்றும் மதிய உணவு சார்ந்த பதிவுகளுக்கான அறிக்கை வட்டார மற்றும் மாவட்ட Log in பதிவிறக்கத்தில் வழங்க வழிவகை செய்யப்படவில்லை. வழிவகை செய்யப்பட்டவுடன் தகவல் தெரிவிக்கப்படும். |
| 9. | BMI பிரிவில், நீண்ட காலமாக வருகை தராத(long absent) வகை மாணவர்களுக்கு என்ன கொடுக்க வேண்டும்? | ஆணையர் அவர்களிடம் தகுந்த ஆலோசனை பெறவும். |
| 10. | 1) DC login க்கு பதிலாக, Raise Request வட்டார அளவில் (BRC Login - ல் ) Approval செய்வது, மாணவர் Request கேட்கும் பள்ளியில்தான் பயில்கிறாரா என்பதை கள அளவில் உறுதி செய்து வழங்கிட ஏதுவாக இருக்கும்.<br>2) பிற மாவட்ட Raise Request மட்டும் DC login ல் தொடரலாம். பிற மாவட்ட வேண்டுகோள்கள் அனுமதி அளிக்கப்பட்ட பின்னர், Common Pool க்கு செல்லும் மாணவர், Request Raise செய்த | புதிய பள்ளியானது Raise Request கொடுத்தவுடன், சம்பந்தப்பட்ட மாணவரது பெற்றோரின் அலைபேசி எண்ணிற்கு OTP வழங்கப்பட்டு, அதன் மூலம் மாணவரை புதிய பள்ளியில் சேர்க்கும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் தாங்கள் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் பின்னாளில் எழ வாய்ப்பில்லை. |

| | | |
|---|---|---|
| | மாவட்டத்திற்கே செல்லும் படி செய்தால் "OoSC Need to be Admitted"" இலக்கில் "Migrated to Other District" எனும் காரணங்கள் அறவே நீக்கப்படலாம்.<br>3) ஒவ்வொரு Raise Request ம் அனுமதி அளிக்கப்பட்ட பின்னர், Request செய்த பள்ளிக்கு குறுஞ்செய்தியாகவோ அல்லது பள்ளி Login ல் உள்ள (Mail Box) அஞ்சல் பெட்டிக்கு செய்தியாகவோ அனுப்பி விடுவதால், அம்மாணவரை உடனடியாக Common Pool-ல் இருந்து பள்ளியில் சேர்த்துவிடலாம். | |
| 11. | Online TC Generation in EMIS - ஒரு பள்ளியில் இருந்து அப்பள்ளியின் அனுமதி இன்றி வேறு பள்ளிக்கு Raise request மூலம் செல்லும் மாணவர்கள் பெயர் past students listல் இருந்து சென்று விடுவதால் அம்மாணவர்களுக்கு TC Generate செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, Raise request மூலம் பிற பள்ளிகளுக்கு செல்லும் மாணவர்கள் TC Generate செய்யும் வசதி ஏற்படுத்த வேண்டும். | Raise request மூலம் பிற பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்வதற்கு முன் EMIS இணையதளத்தில்,"Students Pending Request" என்ற பகுதியில் அம்மாணவர்களின் விவரம் மூன்று நாட்கள் காண்பிக்கப்படும். இங்கு அம்மாணவர்களின் TC Generate செய்ய இயலும். மூன்று நாட்களுக்குப் பிறகே மாவட்ட ஒருங்கிணைப்பாளரால் இப்பகுதியில் உள்ள மாணவர்களின் விவரம் Approve செய்யப்பட்டு அந்த மாணவர்களின் விவரம் புதிய பள்ளிக்கு அனுப்பப்படும். |
| 12. | TC வழங்கப்பட்ட பிரிவில், பள்ளி அளவில் generate செய்ய முடியாத அல்லது வழங்கப்படாத TCக்களின் எண்ணிக்கை குறித்த அறிக்கையைப் பதிவிறக்க மாவட்ட நிர்வாக அளவில் வசதி இருக்க வேண்டும். தரவுகள் இருந்தால், மாவட்ட/தொகுதி அளவிலான நிர்வாகக் குழு, சம்பந்தப்பட்ட பள்ளிகளைத் தொடர்புகொண்டு சிக்கலைச் சரிசெய்யலாம். | மாவட்ட ஒருங்கிணைப்பாளர் Login-ல் கொடுக்கப்பட்ட No of Raise Request Approval = No of TC not generated எனக் கொள்க. |
| 13.. | Library Module ல் பெரும்பான்மையோர், புத்தக எண்ணிக்கையினை தவறுதலாக உள்ளீடு செய்துள்ளனர். இதனை Edit செய்யும் வசதி இல்லாத காரணத்தால் அதனை தொடர்ந்து வரும் புத்தக நகல்களது எண்ணிக்கையை, முதலில் உள்ளீடு செய்திட்ட மொத்த புத்தக | தற்போது Edit செய்யும் வசதி வழங்கப்படவில்லை. பின்னாளில் வழங்கப்படும். மேலும், நூலகத்தில் உள்ள அனைத்து புத்தகங்களின் விவரங்களை Library Module- ல் தவறாது உள்ளீடு செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கையுடன் சமன் செய்ய இயலவில்லை. | |
| 14. | 1) மாணவர்களது இரண்டாவது தவணை தடுப்பூசி உள்ளீடு செய்திட வசதி ஏற்படுத்தப்படவில்லை.<br>2) 12 முதல் 14 வயது வரை மாணவர்களுக்கும் தடுப்பூசி செலுத்த ஆரம்பித்து விட்டதால், அவர்களுக்கும் இதற்கான Module ஏற்படுத்தி தர வேண்டும். | 1) மாணவர்களது இரண்டாவது தடுப்பூசி செலுத்திய விவரத்தினையும் , 12 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்கள் தடுப்பூசி செலுத்திய விவரத்தினையும் உள்ளீடு செய்திட ஏதுவாக, Module உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 15. | அரசு தொடக்கப் பள்ளி, தூத்தூர் (33300900202)<br>இப்பள்ளியில் பணிபுரியும் வகுப்பாசிரியர்கள் வேறு பள்ளியில் இருந்து மாற்றுப் பணியில் பணிபுரிவதால் அப்பள்ளி Loginக்குள் (RBSK Teacher Allotment, eye Screening, Students Attendance, section Marking) கூறுகள் பதிவு செய்ய இயலாத நிலை உள்ளது. மாற்றும் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு அப்பள்ளி Loginக்குள் அனுமதி அளித்து அவர்களுக்கு வகுப்பு மற்றும் பிரிவு ஒதுக்கீடு செய்தல் வேண்டும். | இப்பள்ளியினை பொறுத்தவரையில் அனைத்து ஆசிரியர்களும் மாற்றுப் பணியில் பணிபுரிவதால், இப்பள்ளி User Id& Password மற்றும் தலைமை ஆசிரியரின் User Id& Password உபயோகப்படுத்தி இக்கூறுகளுக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம். |
| 16. | Oosc Report as per 8.3.2022 review meeting, Need to be admitted-528 மாணவர்களில் வெளி மாநிலம் சென்ற மாணவர்கள்-378, வெளிநாடு சென்ற மாணவர்கள்-78, வெளி மாவட்டம் சென்ற மாணவர்கள் -27, 19 வயது நிறைவு செய்தவர்கள் -04, 19 வயது நிறைவு மணமானவர்கள் -01, 10 வகுப்பு தேர்ச்சி பெற்று பணிக்கு செல்பவர்கள் -05, தொடர்ந்து படிப்பவர்கள் -03, மொத்தம்-497. சேர்க்கப்பட வேண்டிய மாணவர்கள் 31 பேரை பள்ளியில் சேர்க்க முயற்சிகள் நடைபெற்று வருகிறது. மேல்குறிப்பட்ட 497 மாணவர்கள் need to be admitted பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும். | அ.) வெளி மாநிலம், வெளி நாடு சென்ற மாணவர்கள் விவரம், உள்ளீடு செய்யும் பிரிவு செயலியிலும், இணையதளத்திலும் (BRTE) ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளி மாநிலப் பிரிவில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் விவரம் 31.03.2022க்குள் "To Be Admitted" பிரிவிலிருந்து நீக்கப்படும். வெளிநாடு சென்ற மாணவர்கள் விவரங்கள் "To Be Admitted" ல் காண்பிக்கப்படுவதில்லை. வெளி மாவட்டம் சென்ற மாணவர்களை பொருத்தமட்டில் அம்மாணவர்கள் கண்டறியப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட்டவுடன் "To Be Admitted" பிரிவிலிருந்து நீக்கப்படுவார்கள். 19 வயது நிறைவு செய்தவர்கள் மற்றும் 19 வயது நிறைவு மணமானவர்கள் விவரம் உள்ளீடு செய்ய தனி பிரிவு செயலியில் உள்ளது. இப்பிரிவுகளின் கீழ் பதியப்படும் மாணவர்கள் விவரம் "To Be Admitted" ல் |

| | | |
|---|---|---|
| | | காண்பிக்கடுவதில்லை. 10 வகுப்பு தேர்ச்சி பெற்று பணிக்கு செல்பவர்கள் என்ற பிரிவு செயலியில் கூடிய விரைவில் சேரக்கப்படும். தொடர்ந்து படிப்பவர்கள் விவரம் "duplicate reasons"ல் சேரக்கப்படலாம். ஒவ்வொரு நாளும் 60-90 நிமிடங்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் இது சார்ந்த விரிவான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. |
| 17. | 1)Quiz அறிக்கையுடன், அன்றைய தினம் quiz நடந்த அவ்வகுப்புகளின் வருகை பதிவினையும் ஒரு கலத்தில் அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.<br>2)மேலும், அனைத்து பிரிவுகளும் (Group) அறிக்கையில் வருவதற்கு பதிலாக, அன்றைய தினம் Quiz ல் பங்கு பெற்ற பிரிவு (Group) மாணவர்களது அடைவு மட்டும் அறிக்கையாக வழங்கிடலாம். (1) Quiz அறிக்கையுடன் அன்றைய தினம் Quiz நடந்த அவ்வகுப்புகளின் வருகைப் பதிவினையும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | (1) Quiz அறிக்கையுடன் அன்றைய தினம் Quiz நடந்த அவ்வகுப்புகளின் வருகைப் பதிவினையும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>(2) அன்றைய தினம் Quiz ல் பங்கேற்ற பிரிவு மாணவர்களது அடைவு மட்டும் அறிக்கையாக வழங்கிட வழிவகை செய்யப்படவில்லை. எனவே, தற்போதுள்ள அறிக்கையில் Filter Option உதவியுடன் வேண்டிய பிரிவு மாணவர்களின் விவரங்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. |
| 18. | மாணவர்களுக்கு நடத்தப்படும் Online Quiz தேர்வு முதல் வாரம் நடத்தப்பட்ட பாடப்பகுதியிலிருந்து வேள்விகளை மறுவாரம் நடத்தப்டும் தேர்விற்கு கேட்கப்பட வேண்டும். | SCERT (Assessment Cell) தொடர்புடைய கேள்வி |
| 19. | ஒவ்வொரு மாணவனும் முழுமையாக விடையளித்த பின் submit கொடுத்தவுடன் எத்தனை மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் என்பதனை அந்தந்த மாணவர்களுக்கு Screen- ல் தெரியப்படுத்த வேண்டும். | இது Assessment Cell (CDAC மற்றும் IIT)ன் மென்பொருள் மேம்பாட்டுத் திட்டப் பணிகளில் உள்ளது. |
| 20. | ஒவ்வொரு மாத இறுதியிலும் அந்தந்த மாதாந்திரப் பாடப்பகுதியிலிருந்து கேள்விகள் கேட்கப்பட வேண்டும். | SCERT (Assessment Cell) தொடர்புடைய கேள்வி |

| | | |
|---|---|---|
| 21. | மாத இறுதியில் நடத்தப்படும் quiz தேர்விற்கான தொகுப்பு மதிப்பெண் பட்டியல் வகுப்பு வாரியாக வெளியிடப்பட வேண்டும். | இந்த வசதி EMIS இணையதளத்தில் (School Login-ல்) உள்ளது. |
| 22.. | வினா மற்றும் வினாவிற்கான சரியான விடைக்குறிப்புகளை ஆசிரியர்களுக்கான Emis ID- ல் அனுப்ப வேண்டும். இதனை பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு மீள்பார்வை செய்ய இயலும். | இந்த வசதி EMIS இணையதளத்தில் (Teacher Login-ல்) 29 மார்ச் முதல் உள்ளது. |
| 23. | Emis Web - ல் அனைத்து பாட அலகுகளுக்கும் Objective type வினாக்கள் அலகு வாரியாக தனித்தனியாக பதிவேற்றம் செய்தால் பாட ஆசிரியர்கள் தாங்கள் நடத்திய அந்தந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியினை quiz exam நடத்த வாய்ப்பாக அமையும். | இது Assessment Cellன் மென்பொருள் மேம்பாட்டுத் திட்டப் பணிகளில் உள்ளது. |
| 24. | மாணவர்களுக்கு வாரம் வாரம் quiz exam நடத்தப்படும்போது குறைந்தது 4 பாடவேளைகள் வீணாகிறது. இதனைத் தவிர்க்க மாதம் இருமுறை மட்டுமே நடத்தினால் நன்றாக இருக்கும். | இது துறை சார்ந்த முடிவுக்கு உட்பட்டது. |
| 25. | மாணவர்கள் Quiz exam எழுதும்போது கடைசியாக Complete Quiz கொடுத்தாலும் மீண்டும் மீண்டும் இறுதி பக்கமே காட்டுகிறது. சில சமயங்களில் வினாக்கள் 60 என்று வருகிறது. இதனை சரி செய்ய வேண்டும். மேலும் Refresh button -ஐ அழுத்தினாலும் வினாக்களின் விடை எண்ணிக்கையின் பட்டியல் 60 என காட்டுகிறது. எனவே Refresh button -ஐ அழுத்தினாலும் வினா-விடைப் பட்டியலில் 60 என்று மாறாமல் எத்தனை வினாக்கள் உள்ளனவோ அதே எண்ணிக்கையிலான வினாவிடைப் பட்டியலும் இருக்க வேண்டும். | இந்த தொழில்நுட்ப பிழைகள் சரிசெய்யப்பட்டுவிட்டது. |
| 26. | ஹைடெக் லேபில் வினாடி வினா நிகழ்வில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால் உடனே தொடர்புகொள்ளும். வகையில் மாநில அளவில் கண்காணிக்கும் ஒருங்கிணைப்பாளரின் தொலைபேசி எண்ணை தர வேண்டும்.. | இது துறை சார்ந்த முடிவாகும். |
| 27. | Emis Web - ல் மாணவர்களுடைய விவரங்கள் மற்றும் Bank details- ஐ | 1 முதல் 12 வகுப்பு வரை உள்ள மாணவர்களின் வங்கிக் கணக்கு |

| | | |
|---|---|---|
| | பதிவேற்றம் செய்திருந்தாலும் அவர்களுடைய வங்கி கணக்கு விவரங்களை Special Cash Incentive- ல் மீண்டும் ஒருமுறை 10,11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. வங்கி கணக்கு விவரங்கள் தானாக Special Cash Incentive- ல் save ஆகுமாறு செய்திட வேண்டும். | விவரங்களை பெறுவது இதுவே முதல் முறையாகும். EMIS இணையதளத்தில் "Student Profile"ல் உள்ளீடு செய்யப்பட்ட வங்கி விவரங்கள் "Special Cash Incentive" பகுதியில் விரைவில் சேரக்கப்படும். |
| 28. | Special Cash Incentive பிரிவில், நீண்ட காலமாக வருகை தராத (long absent) வகை மாணவர்களுக்கு என்ன கொடுக்க வேண்டும்? | ஆணையர் அவர்களிடம் தகுந்த ஆலோசனை பெறவும். |
| 29. | .பத்தாம் வகுப்பு பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் ஊக்கத் தொகை(Special Cash Incentive) பற்றிய விபரங்களை பள்ளி அளவில் பதிவு செய்தவுடன் பள்ளி வாரியாக மொத்த மாணவர்களின் எண்ணிக்கை பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்படாத மாணவர்களின் எண்ணிக்கை என்று வகைப்படுத்துதல் என்ற அடிப்படையில் மாவட்ட அளவில் கண்காணிப்பதற்கு இந்த எளிமையான வசதியை உருவாக்கி தரவேண்டும். | பத்தாம் வகுப்பு பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கான சிறப்பு ஊக்கத் தொகை(Special Cash Incentive) திட்டத்தில் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்படாத மாணவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை மாவட்ட அளவில் தெரிந்து கொள்ளும் வண்ணம், அவ்வறிக்கை District Corordinator (DC), மற்றும் CEO login ல் Downloads எனும் பகுதியில் CEO Review Format எனும் தலைப்பின் கீழ் ஏற்கனவே உள்ளது. |
| 30. | Teachers wrong academic qualification - தொழிற்கல்வி ஆசிரியர்கள் DME(Diploma in Mechanical Engineering) தகுதி பதிவேற்றம் செய்ய இயலாத நிலை உள்ளது. | இந்த தொழிற்கல்வி படிப்பு, DME(Diploma in Mechanical Engineering) EMIS இணையதளத்தில் உள்ளீடு செய்யப்படும். |
| 31. | ஆசிரியர்களின் தவறான கல்வித் தகுதி அறிக்கையில்', PTI ஆசிரியர்களின் பெயர்கள் "Incomplete" என காட்டப்படுகின்றன. அதை மாநில அளவில் சரி செய்ய வேண்டும். | கூடிய விரைவில் இது சார்ந்த மாற்றம் செய்யப்படும். |
| 32. | Emis Web - ல் மாணவர்களுக்கு Motivational Speech இடம் பெற்றால் மாணவர்களுக்கு கல்வி கற்க ஊக்கமும், ஆர்வமும் ஏற்பட வழி வகுக்கும். இது மாதம் ஒரு முறை 30 நிமிடம் அமைந்திருந்தால் மதிப்பீட்டுக் கல்வி (Value Education) பாடப் பகுதி நேரத்தில் | இது துறை சார்ந்த முடிவுக்கு உட்பட்டது. |

| | | |
|---|---|---|
| | காணொளி காண ஏற்பாடு செய்யலாம் | |
| 33. | DOTE (7.5 Reservation Module)<br>i) மாணவர்கள் கடந்த காலத்தில் படித்த பள்ளிகள் மூடப்பட்டால் அல்லது பெயர் மாற்றம் செய்யப்பட்டால், அந்தப் பள்ளிகள் UDISE போன்ற விவரங்கள் மெனுவில் காட்டப்படவில்லை. அந்த சந்தர்ப்பங்களில், என்ன செய்ய வேண்டும்?<br>ii) ஒரு மாணவர் NRSTC மூலம் படித்திருந்தால், எப்படி சரிபார்க்க வேண்டும்?<br>iii) ஒரு மாணவர் 2009 ஆம் ஆண்டுக்கு முன் 1 ஆம் வகுப்பில் சேர்ந்து பள்ளியை விட்டு வெளியேறி, பின்னர் சில ஆண்டுகளுக்குப் பிறகு படிப்பைத் தொடர்ந்தால், அந்த மாணவர்களை எவ்வாறு சரிபார்க்க வேண்டும்?<br>iv.) ஒரு மாணவர் ஒரே பள்ளியில் 06 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால், ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாக போனஃபைடு சான்றிதழை ஏன் பதிவேற்ற வேண்டும்? அதே டேட்டாவைப் பதிவேற்றுவது கூடுதல் சுமை. எனவே, செயல்முறையை எளிமைப்படுத்த வேண்டும்.<br>v.) தரவு தவறாகப் பதிவேற்றப்பட்டிருந்தால், பிழைகளைத் திருத்த அல்லது மாற்றியமைக்க வசதி ஏற்படுத்த வேண்டும். (எ.கா. - தவறாக தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி பெயர்கள்) | i) "Closed" பள்ளிகளின் பெயர்பட்டியல் தற்பொழுது சேர்க்கப்பட்டுள்ளது.<br>ii &iii) இது துறை சார்ந்த முடிவாகும்.<br>iv.) கூடிய விரைவில் இதற்கான வசதி ஏற்படுத்தித் தரப்படும்.<br>v.) கூடிய விரைவில் இதற்கான வசதி ஏற்படுத்தித் தரப்படும். |
| 34. | 1)EMIS Login சார்ந்த இடர்பாடுகள், User Name Does not Exist, Account is inactive போன்ற வேண்டுகோள்கள் மாநிலத்திற்கு தெரிவிக்கப்பட்டு சரி செய்து தருவதற்கு பதிலாக, மாவட்ட அளவில் | (1) & (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளுக்கான தீர்வுகாணும் வழிமுறைகள் விரைவில் வழங்கப்படும். |

| | | |
|---|---|---|
| | இதற்கான தீர்வுகாணும் வழிமுறைகள் வழங்கப்பட்டால், அது போன்ற பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வு காணலாம்.<br>2.) இலகுவாக தீர்த்து விடக்கூடிய சில சந்தேகங்கள், போதிய பயிற்சியின்மை காரணமாக நீண்ட நாட்கள் நிலுவையில் இருந்திட வாய்ப்புகள் உள்ளதால், எந்தவொரு புதிய Module ஐ EMIS ல் சேர்த்திடும் போதும் அது பற்றிய ஆயத்த பயிற்சியோ, குறும்பட விளக்கமோ அளித்திடலாம். | (3) ஒவ்வொரு புதிய Module ஐ EMIS ல் சேர்த்திடும் பொழுது, அது குறித்த குறும்பட விளக்கம் EMIS Tamil Nadu எனும் Youtube Channel ல் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. |
| 35.. | 1)பல்வேறு உட்கூறுகள் சார்ந்த அறிக்கைகள் பதிவிறக்கம் செய்திடும் பொழுது, வட்டார அளவிலான அறிக்கை, மாவட்ட அளவிலான அறிக்கை மற்றும் ஆதாராமான பள்ளியில் உள்ளீடு செய்ததற்கான Screenshot அல்லது அந்த Module ல் உள்ள பதிவு சுருக்கம், இவை மூன்றும் ஒன்றுக்கொன்று சில சமயங்களில் முரண்படுகிறது.<br>2)முதன்மைக் கல்வி அலுவவர்களுக்கான மாதாந்திர ஆய்வுக் கூட்டத்திற்கு உட்படுத்தப்படும் EMIS ஆய்வறிக்கைகள், District Login ல் CEO Review Formats எனும் தலைப்பின் கீழ் அளிக்கப்படல் வேண்டும். ஆனால் பெரும்பான்மையான அறிக்கைகள் அவ்வாறு அளிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக கூட்டத்தில் வழங்கப்படும் EMIS அடைவு கையேட்டில் முதலாவதாக அளிக்கப்பட்டுள்ள Common Pool Students எனும் அறிக்கை மாவட்ட/வட்டார அளவில் பதிவிறக்கம் செய்திட இயலாமல், அத் தலைப்பின் கீழ் முன்னேற்றம் காண்பதில் சிரமம் உள்ளது. | (1)உள்ளீடு செய்யப்படும் விவரங்கள் அனைத்தும் பள்ளி அளவில், வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில் என அதற்கென்று உள்ள Time Frequency அடிப்படையிலே Update செய்யப்படும். எனவே, உள்ளீடு செய்யப்பட்ட விவரங்கள் முரண்பட வாய்ப்பில்லை.<br><br>மாதாந்திர ஆய்வுக் கூட்டத்திற்கு உட்படுத்தப்படும் EMIS ஆய்வறிக்கைகள், District Login ல் CEO Review Formats எனும் தலைப்பின் கீழ் பின்னாளில் வழங்கப்படும். |
| 36. | செயல்முறையை எளிதாக்க, (EMIS Module) தொகுதி தொடர்பான சிக்கல்களை சரிசெய்வதற்கான வசதி மாவட்ட அளவில் ஏற்படுத்தப்பட வேண்டும். | தற்போதுள்ள நடைமுறைபடி, மாவட்ட அளவில் சில வசதிகள் (கடவுச் சொல் மாற்றம் போன்று) வழங்கப்பட்டுள்ளன. EMIS Module ல் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் சார்ந்து மாவட்ட அளவில் பெறப்படும் ஆலோசனைகளின்படி உடனுக்குடன் மாற்றங்கள் செய்து கொடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 37. | நன்றாக செயல்படும் மற்றும் செயல்படாத மாணவர்களின் கழிப்பறைகளை பதிவு செய்ய வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் | இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் இதற்கான வசதி ஏற்படுத்தித் தரப்படும். |
| 38. | ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுயவிபரம் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத பகுதியினை பள்ளித் தலைமையாசிரியர் கண்டறியும் வண்ணம் பள்ளி அளவிலும் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கண்டறியும் வண்ணம் மாவட்ட அளவிலும் வசதியை ஏற்படுத்தி தரவேண்டும். | ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சுயவிபரம் பதிவு செய்யப்படாத பகுதியினை, excel அறிக்கையாக பள்ளி அளவில் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம். |